| Publication | Dina Mani |
|---|---|
| Date | 24.02.2014 |
| Edition | Tamil Nadu |
| Page No | 04 |

# ஊழலற்ற சமுதாயம் உருவாக தரமான கல்வி அவசியம்

## டாக்டர் சாந்தா வலியுறுத்தல்




சென்னையில் லிபா கல்வி நிறுவனம் சார்பில் நடைபெற்ற விழாவில் அன்னை தெரசா விருதை ஏசிசி லிமிடெட் மதுக்கரை சிமெண்ட் நிறுவனத்தின் உதவி பொதுமேலாளர் ஷாம் சுந்தரிடம் வழங்குகிறார் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தலைவர் டாக்டர் வி.சாந்தா. உடன் (இடமிருந்து) முன்னாள் தலைமை கண்காணிப்பு ஆணையர் என்.விட்டல், அருட்தந்தை ஜெயாபதி பிரான்சிஸ், கல்வி நிறுவனத்தின் இயக்குநர் பீட்டர் சேவியர், ஐசிஐசிஐ வங்கி தலைவர் என்.வாகுல்.

**சென்னை, பிப்.23:** ஊழலற்ற சமுதாயம் உருவாக தரமான கல்வி அவசியம் என அடையாறு புற்றுநோய் மையத்தின் தலைவர் டாக்டர் சாந்தா வலியுறுத்தினார்.

லயோலா வணிக நிர்வாக கல்வி நிறுவனம் (லிபா) சார்பில், 13-ஆவது அன்னை தெரசா கார்ப்பரேட் குடிமகன் விருது வழங்கும் விழா, கிண்டியில் நடைபெற்றது.

நேர்மையான வணிக நடைமுறைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த செயல்பாடு உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, 2013-ஆம் ஆண்டின் அன்னை தெரசா கார்ப்பரேட் குடிமகன் விருது, ஏ.சி.சி. சிமெண்ட் நிறுவனத்துக்கு (மதுக்கரை) வழங்கப்பட்டது. கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ் அடங்கிய விருதை, இந்த நிறுவனத்தின் உதவி பொது மேலாளர் ஷாம் சுந்தரிடம், அடையாறு புற்றுநோய் மையத்தின் தலைவர் டாக்டர் சாந்தா வழங்கினார்.

விழாவில் சாந்தா பேசும்போது, மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர்படிப்புகளைப் பயில, தகுதியின் அடிப்படையில் மட்டுமே மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு தரமான கல்வி கிடைக்கும். மேலும் வேலையில்லா திண்டாட்டத்துக்கு தீர்வும், ஊழலற்ற சமுதாயம் உருவாக வழியும் கிடைக்கும். சேவைத் துறையான மருத்துவம் வணிகமயமாவது தடுக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

விழாவில், முன்னாள் தலைமை கண்காணிப்பு ஆணையர் என்.விட்டல், முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, லிபா கல்வி நிறுவனத்தின் இயக்குநர் பீட்டர் சேவியர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.